உ

சிவமயம்

# கூத்து முடியுமுன் குலைந்தது வேடம்

## நல்லூரிலிருந்து நாவலர் சிலையை நசுக்கிடாமல் நகர்த்தியவர் யார்?

## சிந்தாமணிச் செய்தி

அனைத்தையும் அம்பலமாக்கிவிட்டது

வெளியீடு:
ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மன்றம்
411/1, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

# புகுமுன்

நல்லூர் ஆலய முன்றலில் அமைதியாக அமர்ந்திருந்த நாவலர் பெருமானின் திருவுருவச் சிலைக்கு நடந்தது என்ன?

20-10-85 சிந்தாமணி இதழ் உண்மையை உடைத்துக் காட்டி விட்டது.

யாழ்ப்பாணக் கலாசாரம்- கந்தபுராணக் கலாசாரம். அதனை உருவாக்கியவர் நாவலர் பெருமான்.

இன்று நாவலர் பெருமானின் திருவுருவச் சிலை நடுத்தெருவில்.........

யாழ். மாநகரசபை ஆணையாளர் மணிமண்டபத்திலிருந்து திருவுருவச் சிலையைப் பெயர்த்தெடுத்தார்

அரசாங்கக் கட்டிடத்தில் அரசின் அனுமதி இன்றி திருவுருவச் சிலை (தற்காலிகமாக) கரந்துறைகின்றது. இது சிந்தாமணிச் செய்தியின் பொழிப்பு.

அரசகட்டிடத்தில் இருந்து திருவுருவச் சிலையை அகற்றும் கட்டளை எந்த நிமிடத்திலும் வரலாம்.

வந்தால்......

**சிலையின் நிலை என்ன?**

## சிந்தாமணி இதழ் மூலம் நாம் பெறும் தகவல்கள்.

- ❀ நல்லூர் நாவலர் மணிமண்டபத்திலிருந்து திருவுருவச் சிலை நகுக்கிடாது நகர்த்தப்பட்ட பொட்டுக்கேடுகள் அம்பலம்.

- ❀ நகரின் மத்தியிலிருந்து அகற்றப்பட்ட நாவலர் திருவுருவச் சிலை அமைச்சின் சொந்தக் கட்டிடத்தில் தற்காலிகமாக நிறுவப்பட்டுள்ளது.

- ❀ அமைச்சின் அனுமதியின்றி நடைபெற்ற இச் சம்பவங்களுக்காக தனது ஆழ்ந்த வருத்தத்துடன், இது தொடர்பாக ஏற்பட்ட தவறுதல்களையும் ஒப்புக் கொண்டுள்ளாராம் எமது யாழ் மாநகர மன்ற ஆணையாளர் திரு. சி. வி. கே. சிவஞானம்

---

### நாவலர் சபைக்கு மேலும் ஒரு வேண்டுகோள்

"எலிப் பொறியாயினும் தன் பொறியாக இருக்கவேண்டும்" –இது முதுமொழி.

ஒட்டுக் குடித்தனத்தில் ஒட்டுக்குடித்தனம் நடாத்தும் யாழ் மாநகர சபையும் அதன் ஆணையாளரும் பெருமானாரின் குருபூசைக்குமுன் பெருமானாரின் திருவுருவச் சிலையினை அவர் சொந்த மணிமண்டபத்திற்கு மாற்ற ஆவன செய்வார்கள் என நம்புவதுடன், நல்லூர் அறங்காவலரும் பெரிய மனது வைத்து இம் முயற்சிக்கு தமது முழுமையான ஒத்துழைப்பினையும் ஆதரவினையும் வழங்குவார்களாக!

நல்லை நகர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்
திருவுருவச் சிலையை அகற்றிய
யாழ்ப்பாணம் மாநகர மன்ற

ஆணையாளர் அவர்களே!

20-10-85 அன்று வெளிவந்த சிந்தாமணி இதழில் திருவுருவச் சிலை அகற்றிய விபரங்களுக்கு உமது ஆணைக்குட்பட்ட 'உண்ணாட்டு' பத்திரிகைகள் மூலம்

**பதில் கூறுவீர்களா?**

**ஐயா! இது எமது தாழ்மையான வேண்டுகோள்.**

நாவலர் சபைக்கு யாழ்ப்பாண சைவ மக்களின் எதிர்ப்பைத் தெரிவிக்காமல்- மூடி மறைத்து- அவர்களின் கண்களில் மண்ணைத் தூவி- ஓரிருவரைக் கைக்குள் வைத்து தவறானவழியில் சபையை வழிநடாத்தி, திருவுருவச் சிலையை அகற்றும் ஆணையை அவசரமவசரமாகப் பெற்றமையைப் பெரும் பாதகச் செயல் என்று கூறுவதால் ஏதும் தவறுண்டா ஐயா?

21-10-85 **பதிப்பாளர்**

சிவமயம்

யாழ்ப்பாணத்திலும் மற்றும் தமிழ் மக்கள் வாழும் பகுதிகளிலும் பெரும் சர்ச்சையைக் கிளப்பியுள்ள நாவலர் சிலை அகற்றப்பட்ட சம்பவத்திற்கும் பிரதேச அபிவிருத்தி அமைச்சிற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை. பிரதேச அபிவிருத்தி அமைச்சினுல் அமைக்கப்பட்டிருக்கும் ஆறுமுகநாவலர் கலாச்சார நிலையம், நாவலர் சபையிடமோ அன்றி வேறு ஸ்தாபனங்களிடமோ ஒப்படைக்கப்படவில்லை.

இவ்வாறு பிரதேச அபிவிருத்தி அமைச்சின் இந்து சமய கலாசாரத் திணைக்களத்தின் பணிப்பாளர் திருமதி ராஜலட்சுமி அம்மாள் கைலாசநாதன் ''சிந்தாமணி'' க்குத் தெரிவித்தார்.

இவர் மேலும் தெரிவித்ததாவது:-
பிரதேச அபிவிருத்தி அமைச்சர் திரு. செ. இராசதுரை இந்து சமய கலாசார அமைச்சுக்கு ஒதுக்கிய நிதியின் மூலம் 20 இலட்ச ரூபாவிற்கும் அதிகமான செலவில் நாவலர் கலாசார நிலையம் யாழ். நகரில் நாவலர் வீதியில் அமைக்கப்பட்டிருக்கிறது.

மேற்படி கலாசார நிலையம் அமைப்பதற்கு நாவலர் சபையோ அன்றி தனிப்பட்ட எவருமோ நிதி வழங்கவில்லை. நிதி சேகரிக்கப்படவும் இல்லை. முற்றிலும் இந்து சமய கலாசாரத் திணைக்களத்திற்கே இந்நாவலர் கலாசார நிலையம் சொந்தமானதாகும்.

சமய நிகழ்ச்சிகள், கலாசார விழாக்கள் மற்றும் கலை, கலாசார தொடர்புடைய நிகழ்ச்சிகளை நடத்தக்கூடிய வகையில் பொது மக்களின் பாவனைக்காகவே கலாசார நிலையம் அமைக்கப்பட்டது. பிரதேச அபிவிருத்தி அமைச்சின் நிர்வாகத்தின் கீழேயே அது நிர்வகிக்கப்படும். இதனை எந்த ஒரு சபையும் உரிமை கோர முடியாது.

யாழ் நூலகம் சமீப காலத்தில் சில தீய சக்திகளினுல் இரண்டு முறை நாசமாக்கப்பட்டதைத் தொடர்ந்து யாழ். மாநகர சபை ஆணையாளர் திரு. கே. சிவஞானம் இந்திய அரசினுல் அன்பளிப்புச் செய்யப்பட்ட பெறுமதிமிக்க நூல்களையும் ஏனைய சஞ்சிகைகளையும் பாதுகாத்து வைப்பதற்கு ஒரு இடமில்லை என்றும், தற்பொழுது அமைக்கப்பட்டி

ருக்கும் கலாசார நிலையத்தின் ஒரு பகுதியில் தற்காலிகமாக மேற்படி நூல்களைப் பாதுகாத்து வைக்க அமைச்சிடம் கேட்டிருந்தார்.

பொது நல நோக்குடன் விடுக்கப்பட்ட இவ் வேண்டுகோளை ஏற்று, மேற்படி கலாசார நிலையத்தின் மேல் மாடியில் ஒரு பகுதியைக் தற்காலிக நூல் நிலையமாக உபயோகிக்க அனுமதித்தோம்.

அதுவும் அவசியமேற்படும் போது இரண்டு மாத முன் அறிவித்தலுடன் கட்டடத்தை அமைச்சிடம் மீண்டும் ஒப்படைக்க வேண்டும் என்ற நிபந்தனையின் பேரிலேயே ஆணையாளர் திரு. சிவஞானத்திடம் ஒப்படைக்கப்பட்டது.

எக்காரணம் கொண்டும் இக்கட்டடத்தை நிரந்தர நூல் நிலையமாகப் பயன்படுத்தவோ பெயர்ப் பலகைகளைத் தொங்க விடவோகூடாது என எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

பிரதேச அபிவிருத்தி அமைச்சினால் அமைக்கப்பட்டிருக்கும் நாவலர் கலாசார நிலையத்தில் இந்து சமய நூல் நிலையம் ஒன்றை அமைக்கவும் நாவலர் பெருமானின் உருவச் சிலையொன்றை பிரதிஷ்டை செய்யவும் அமைச்சு திட்டமிட்டிருக்கிறது

நகரின் மத்தியிலிருந்து அகற்றப்பட்ட நாவலர் சிலை அமைச்சுக்குத் தெரியாமலும், அனுமதிபெறாமலும் அமைச்சுக்கு சொந்தமான கட்டடத்தில் நிறுத்தப்பட்டிருக்கிறது.

இச் சம்பவம் செய்திப் பத்திரிகைகள் வாயிலாகவும், பகிரங்க கடிதங்கள் மூலமாகவுமே அமைச்சுக்குத் தெரியவந்துள்ளது.

இதனை அறிந்து அதிர்ச்சியும் கவலையும் அடைந்த அமைச்சர் திரு. இராசதுரை யாழ் மாநகர ஆணையாளர் திரு. சிவஞானத்தை அழைத்து சம்பவங்கள் பற்றி தீவிரமாக விசாரணை நடத்தியுள்ளார்.

அமைச்சின் அநுமதியின்றி நடைபெற்ற இச் சம்பவத்திற்காக தனது ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக் கொண்ட ஆணையாளர் இது தொடர் பாக ஏற்பட்ட தவறுகளையும் ஒப்புக் கொண்டுள் ளார்.

*அமைச்சுக்கு வந்த டெலிகிராம் சுற்றுநிருபம் ஒன்றின் மூலம் யாழ் மாநகர ஆணையாளர் திரு. சிவஞானம் நாவலர் சபையின் உப தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார் என்பதும் தெரியவந்தி ருக்கிறது இவ்வாறு திருமதி கைலாசநாதன் குறிப்பிட்டார்*

*திருபர்:* திரு. சிவஞானம் நாவலர் சபையின் உப தலைவராக தெரிவு செய்யப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது. அப்படியானால் கலாசார நிலையத்தை சபையின் உப தலை வர் என்ற ரீதியிலா அவரிடம் ஒப்படைத்தீர்கள்?

*கைலாச:* இல்லை யாழ். மாநகரின் ஆணையாளர் என்ற ரீதியிலேயே தற்காலிகமாக இது ஒப்படைக் கப்பட்டது. உப தலைவர் என்ற முறையிலோ அன்றி தனிப்பட்ட முறையிலோ ஒப்படைக்கப்படவில்லை.

*திருபர்:* வைபவ ரீதியாக இந்து சமய முறைப்படி விழா எடுத்து, நிறுவப்பட்ட நாவலர் சிலை மிகவும் சாதா ரணமாக பழைய சாக்கில் சுற்றி நகரசபைலொறியில் ஏற் றிச் செல்லப்பட்டதாகக் கூறப்படுகிறது. இது தொடர்பாக இந்து கலாசார நடவடிக்கைகளுக்குப் பொறுப்பானவர் என்ற முறையில் நீங்கள் என்ன நடவடிக்கை எடுத்தீர்கள்?

*கைலாச:* சம்பவம் நடக்கும் முன் எமக்குத் தெரிந் திருந்தால் அதனை நிச்சயமாகத் தடுத்திருப்போம். ஆனால் எல்லாம் நடந்து முடிந்த பின்புதானே எங்களுக்குத் தெரிய வந்துள்ளது.

*திருபர்:* அப்படியானால் இதன் பின் நீங்கள் மேற்கொண்ட அல்லது மேற்கொள்ளவிருக்கும் மாற்று நடவடிக்கை என்ன?

கைலாச: இது தொடர்பாக அமைச்சர் யாழ். ஆணையாளர் திரு. சிவஞானத்தை அழைத்து விளக்கம் கேட்டுள்ளார். மற்ற விடயங்கள் பரிசீலனை செய்யப்பட்டு வருகின்றன.

நிருபர்; அமைச்சின் அனுமதியின்றி அமைச்சுக்குச் சொந்தமான கட்டடத்தில் நிறுவப்பட்டிருக்கும் இச்சிலையை அகற்றி மீண்டும் பழைய இடத்திலேயே நிறுவ நடவடிக்கை எடுப்பீர்களா?

கைலாச: இது பற்றி அமைச்சு தீர்க்கமான முடிவு எதுவும் இதுவரை செய்யவில்லை.

நிருபர்: கலாசார நிலையத்தை நாவலர் சபையிடம் ஒப்படைக்கப் போவதாக செய்திகள் வந்துள்ளன. இது உண்மையா?

கைலாச: அந்த நோக்கம் எமக்கில்லை. அமைச்சின் இந்து சமய கலாசாரத் திணைக்களத்தின் மூலமே நிலையம் நிர்வகிக்கப்படும்.

நிருபர்: பிரதேச அபிவிருத்தி அமைச்சர்தான் யாழ். மாநகர ஆணையாளர் மூலமாக இச்சிலையை அகற்றிப் புதிய கலாசார நிலையத்தில் அதனை நிறுவியதாகக் கூறப்படுகிறது. சரியானதா?

கைலாச: இது விஷமத்தனமான ஒரு பொய்ப் பிரசாரமாகும். சிலை அகற்றப்பட்ட சம்பவத்திற்கும் பிரதேச அபிவிருத்தி அமைச்சுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை.

நிருபர்: சிலை அகற்றப்பட்டது தொடர்பாக கொழும்பில் ஒரு கண்டனக் கூட்டம் நடத்த ஏற்பாடு செய்யப்படுவதாகத் தெரிகிறது உங்களுடைய அபிப்பிராயம் என்ன?

கைலாச: இந்த விவகாரத்தில் நாம் ஈடுபடவில்லை. எனவே நாம் இது பற்றி எதுவும் கூறுவதற்கில்லை.

இப்படிக் கூறினார் திருமதி கைலாசநாதன்.

**நன்றி!**

சிந்தாமணி 20-10-85.

சுடரொளி அச்சகம் யாழ்ப்பாணம்